செ.வெ.எண்:A07.

# பத்திரிக்கைச் செய்தி

நாள்: 26/06/2020.

## உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), தஞ்சாவூர் அவர்களின் குடிமராமத்துப் பணிகள் ஆய்வு

---

தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. இரா. முருகேசன் அவர்கள் 26-06-2020 அன்று முற்பகல் மணக்கரம்பை ஊராட்சியில் தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கத்தின் மூலம் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் அம்மன்குளத்தில் மேற்கொள்ளப்படும் குடிமராமத்து பணிகளை ஆய்வு செய்தார். இவ்வூராட்சியில் குடிநீர் பணிகள் மற்றும் தூய்மைப் பணிகள் முறையாக செயல்படுத்தப்படுவதை பொது மக்களிடம் கேட்டறிந்தார். மேலும் இவ்வூராட்சியின் சாலைகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி முகக்கவசம் அணியாமல் செல்பவர்களுக்கு அபராதம் விதித்து முககவசங்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து ராஜேந்திரம் ஊராட்சியில் ஜல் ஜுவன் திட்டத்தின் மூலம் 100 சதவீதம் வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் களப்பணிகளை ஆய்வு செய்தார். ஆய்வின்போது தஞ்சாவூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திரு. பாலசுப்ரமணியன் மற்றும் உதவிப்பொறியாளர் திரு. குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
தஞ்சாவூர்.

பெறுதல்